இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 292 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 19 – திங்கள்கிழமை 02 ஜூன் 2025 – வெளியூர் 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 292 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 19 - Monday 02 June 2025 - Dak 24 Pages ₹ 5.00

# மண் - மொழி - மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’

## கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம் – பொதுக்குழுவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புத் தீர்மானம்!



**மதுரை, ஜூன் 2-**

**மதுரையில் நேற்று கழகப் பொதுக்குழுக் கூட்டம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக்குழுவில் 27 வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இப்பொதுக் குழுவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் தீர்மானத்தில் “மண் - மொழி – மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்” என வலியுறுத்தப்பட்டது. இச்சிறப்புத் தீர்மானம் உறுப்பினர்களின் கரவொலிக்கிடை.யே நிறைவேற்றப்பட்டன.**

இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழுக் கூட்டத்தையும், 2 முறை செயற்குழுக் கூட்டத்தையும் நடத்த வேண்டும் என்பது விதிமுறை ஆகும். அந்த வகையில், தி.மு.க. வின் பொதுக்குழுக் கூட்டம் மதுரை உத்தங்குடியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை தொடங்கி நடைபெற்றது.

### வரலாற்றுச் சிறப்புமிக்க 27 தீர்மானங்கள்!

கழகப் பொதுக்குழுவில் 27 வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கழகப் பொதுக்குழு கூடியதும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.மூர்த்தி அனைவரையும் வரவேற்று பேசினார். மேலும் இப்பொதுக்குழுவில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுரையில் நேற்று நடைபெற்ற கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்புத் தீர்மானம் வருமாறு:-

### மண் - மொழி - மானம் காத்திட ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக புதிய உறுப்பினர் சேர்ப்புத் திட்டம்!

**‘எல்லாருக்கும் எல்லாம்’ எனும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால், ஒவ்வொரு வீட்டிலும் ஒருவராவது ஏதேனும் ஒரு திட்டத்தில் பயனாளியாக உள்ளனர். இத்தகைய நலத்திட்டங்களும், மாநிலத்தின் வளர்ச்சியும், தொடர்ந்திடவும், மாநில உரிமைக்கான போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுக்கவும், நமது மண், மொழி, மானம் காத்திடவும் தமிழ்நாட்டின் அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் இணைத்து, வருகின்ற சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. துளியும் சமரசமின்றி நெஞ்சுரத்தோடு தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்திடும் பொருட்டு “ஓரணியில் தமிழ்நாடு” என உறுப்பினர் சேர்க்கையை கழகம் முன்னெடுக்க வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.**

**கழகத்தின் சார்பில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினராக இணைத்திட இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டின் வாக்காளர்களை ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பில் இணைப்பதற்கான செயல்களை மேற்கொண்டு, அடுத்து வரும் இரண்டு மாதங்களில் மாவட்ட - பகுதி - நகர - ஒன்றிய - பேரூர் - வட்ட கிளை கழகச் செயலாளர்கள் தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை நிறைவு செய்திட வேண்டும். அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் தொடங்கி, பாக முகவர்கள் வரை கழகத்தின் அனைத்து உடன்பிறப்புகளும் இதில் முழுமூச்சாக உழைத்திட வேண்டும்.**

**புதிய உறுப்பினர் சேர்க்கைப் பணியை தொகுதி பார்வையாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் முழுமையாகக் கண்காணித்து வெற்றிகரமாக்கிட வேண்டும் என இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் கொண்டுவந்த சிறப்புத் தீர்மானம் உறுப்பினர்களின் கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.

கழகப் பொதுக்குழுவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... பக்கம் - 5

கழகப் பொதுக்குழு தீர்மானங்கள்! பக்கம் - 3

